முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1158

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

30.11.2022, புதன்கிழமை

1. பரம ஆனந்த ஞான குருவே
பரிபக்குவம் தந்தருளும் மாதவகுருவே
சரவணச்சுடரேற்றி உலகை மீட்க
சற்குருவாய் வந்த ஆறுமுகன் என் அவதாரமே
2. அவதார ஞானியே அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
புவனமதில் ஞான அறிவுரை ஆசி
புகலுவேன் சுபகிருது தேள் திங்கள் தன்னில்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 14 ம் நாள் 30.11.2022, புதன்கிழமை)
3. தன்னிலே அரங்கனின் மகா சக்தி
தரணியை காக்கும் வல்லமையாக
அன்னதான சேவையாக பரவிவர
அரங்கன் தர்மத்தை வரவேற்று ஏற்கும் மக்களெல்லாம்
4. எல்லோரும் ஞானிகளாகக் கூடும்
எங்கு அரங்கன் தர்மம் நடக்கின்றதோ
வல்லமைபட அங்கெல்லாம் ஆறுமுகன் என் ஆசியும்
வரமாக உலகோர்க்கு சக்தியாகக் கிட்டி
5. கிட்டியே உலகம் மாற்றங்காணும்
குறையில்லாத மேன்மைபலன் கூடி
தட்டாது அரங்கன் வழி வரும் மக்களுக்கு
தண்டாயுதன் என் அருளும் துணையும் பரிபூரணமாய் உண்டுஉண்டு
6. உண்டான மாதர்மஞானி அரங்கன்
உயர்வழிகளை ஏற்றால் போதும்
கொண்டதொரு துன்பங்கள் ஏதும் இல்லாத
கர்மவினை சூழாத பெருவாழ்வாய் மக்கள் கண்டு
7. கண்டுமே கலியினில் ஞானிகளாக
கந்தவேலன் என் தலைமை கொண்டநல்
அழியாமை பெற்று ஞானிகள் ஆட்சி
அகிலமே கண்டு உயர நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–